## இராமநாதபுரம் நகராட்சி

## 2021–2022ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### 1) அமைப்பும் பொது நிர்வாகமும்

இராமநாதபுரம் நகர் மன்றத்தின் வரம்பிற்குள் சூரன்கோட்டை, பேராவூர், பட்டிணம்காத்தான், சக்கரைக்கோட்டை, இராஜசூரியமடை, கூரியூர், அச்சுந்தன்வயல் ஆகிய கிராமங்களின் பகுதிகள் அடங்கியதாகும். 1.4.1959 ஆம் நாளிட்ட உள்ளாட்சித் துறை அரசாணை எண்.722–ல் மேற்கூறிய கிராமங்களின் பகுதிகள் அடங்கிய இராமநாதபுரம் பேரூராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டது. 22.03.1975 ஆம் தேதி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரின் அரசாணை எண்.533ன்படி மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து இரண்டாம் நிலையாக உயர்த்தப்பட்டது. 17.04.1984 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரின் அரசாணை எண்.599–ன்படி இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. முதல் நிலை நகராட்சியிலிருந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.51 நாள். 06.03.2019ன்படி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது. நகராட்சியின் பரப்பளவு 6.33 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

**வார்டு பிரிவினை செயல்படுத்துதல்.**

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் அரசு தனது அரசாணை எண்.135, நாள்.11.06.96–ன்படி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) இந்நகராட்சியை 33 வார்டுகளாகப் பிரிவினை செய்யப்பட்டது. இதில் 2001 ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் பெண்கள் அதிகம் உள்ள வார்டுகளான 2,3,4,7,8,15,17,18,20,26,29,30,31 ஆகிய வார்டுகளை பெண்களுக்கென (பொது) ஒதுக்கபட்டது. 2001 ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தாழ்த்தப்பட்டோருக்கு 11 மற்றும் 23,24 ஆகிய மூன்று வார்டுகளை ஒதுக்கப்பட்டது. இதில் 11–வது,24–வது வார்டு இருதரப்பினருக்கும் பொதுவாகவும் 23–வது வார்டு பெண்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது. முந்தைய வார்டுகளான 1,5,6,9,10,12,13,,14,16,19,21,22,25,27,28,32,33 பொதுவான வார்டுகளாகவும் ஒதுக்கப்பட்டது.

**மக்கள் தொகை**

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்நகராட்சியின் மக்கள் தொகை 64257 ஆகும்.

**<u>அதிகாரம் படைத்தவர்கள்</u>**

கீழ்க்கண்டவாறு அறிக்கையாண்டில் நகராட்சி ஆணையர்கள் பணிபுரிந்துள்ளார்கள்.

| பெயர் | காலம் |
|---|---|
| திருவிஸ்வநாதன், ஆணையாளர் | 01.04.2021 முதல் வரை 14.07.2021 வரை |
| திரு.நீலேஸ்வர், நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொ) | 15.07.2021 முதல் 21.11.2021 வரை |
| திருமதி.இரா.சந்திரா, ஆணையாளர் | 22.11.2021 முதல் 31.03.2022 வரை |

**<u>நகராட்சி பொறியாளர்</u>**

அறிக்கை ஆண்டில் திரு.நீலேஸ்வர் 1.4.2021 முதல் 06.01.2022 வரை நகராட்சி பொறியாளராக பணிபுரிந்து வந்துள்ளார். திரு.கோவிந்தராஜ் 7.1.2022 முதல் 31.03.2022 வரை நகராட்சி பொறியாளராக கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வந்துள்ளார்.

**<u>துப்புரவு அலுவலர்</u>**

திரு.ஸ்டாலின் குமார், 1.4.2021 முதல் 30.11.2021 வரை துப்புரவு அலுவலராக பணிபுரிந்துள்ளார். திரு.குமார் 01.12.2021 முதல் 31.03.2022 வரை துப்புரவு அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

அறிக்கை ஆண்டில் திரு.செல்லப்பாண்டி, திரு.மாரிமுத்து, திரு.ஸ்ரீஜேஸ் குமார், திரு.சரவணக்குமார் ஆகியோர்கள் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வந்துள்ளார்கள்.

**<u>நகரமைப்பு ஆய்வர்கள்.</u>**

திரு.ராஜ்குமார் 1.4.2021 முதல் 31.03.2022 வரை அறிக்கை ஆண்டில் நகரமைப்பு ஆய்வராக பணிபுரிந்து வந்துள்ளார்.

**<u>வருவாய் ஆய்வர்</u>**

அறிக்கையாண்டில் திரு.பத்மநாபன் வருவாய் ஆய்வாளராக 01.04.2021 முதல் 31.03.2022 வரை பணிபுரிந்து வந்துள்ளார்.

**<u>இளநிலை பொறியாளர்</u>**

| பெயர் | காலம் |
|---|---|
| திருமதி.லெட்சுமி, இளநிலை பொறியாளர் | 01.4.2021 முதல் 31.03.2022 வரை |

**<u>மன்றம்</u>**

அறிக்கை ஆண்டில் ஒரு சாதாரண கூட்டம் நடைபெற்றுள்ளது. அக்கூட்டத்தில் 14 கூட்டப் பொருள்கள் வைக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

**<u>மன்ற உறுப்பினர்கள்</u>**

| வ. எண் | வார்டு | பெயர் | கைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | வார்டு 1 | திருமதி முனீஸ்வரி வ | 9443111422 |
| 2 | வார்டு 2 | திருமதி ஜோதிமணி மு | 9842420037 |
| 3 | வார்டு 3 | திருமதி மங்கையற்கரசி டி | 7010274094 |
| 4 | வார்டு 4 | திருமதி தனபாண்டியம்மாள் ம | 9842388514 |
| 5 | வார்டு 5 | திரு இராஜராம்பாண்டியன் ந | 9842420037 |
| 6 | வார்டு 6 | திருமதி கயல்விழி வி | 8525085016 |
| 7 | வார்டு 7 | திரு பிரவீன் தங்கம் இரா | 6369037313 |
| 8 | வார்டு 8 | திருமதி செல்வராணி வி | 7010590170 |
| 9 | வார்டு 9 | திரு நாகராஜன் தா சி | 9443133798 |
| 10 | வார்டு 10 | திரு காளிதாஸ் கா | 9994456084 |
| 11 | வார்டு 11 | திருமதி ராணி ம | 9751686912 |
| 12 | வார்டு 12 | திரு கமலக்கண்ணன் கோ | 9843331370 |
| 13 | வார்டு 13 | திரு வீரசேகர் மு | 9842390244 |
| 14 | வார்டு 14 | திருமதி விஜயலெட்சுமி செ | 9842036862 |
| 15 | வார்டு 15 | திரு காதர் பிச்சை அ | 9488268795 |
| 16 | வார்டு 16 | திரு ஜெயராமன் ஜெ | 9842907610 |
| 17 | வார்டு 17 | திருமதி ஜோதிபுஷ்பம் நே | 9443465949 |
| 18 | வார்டு 18 | திரு மணிகண்டன் கோ | 9443102904 |
| 19 | வார்டு 19 | திருமதி சபிக்காபானு மு | 8056667615 |
| 20 | வார்டு 20 | திரு குமார் கோ | 9865258562 |
| 21 | வார்டு 21 | திரு இராமசுப்பிரமணியன் து | 9443322918 |
| 22 | வார்டு 22 | திருமதி கனகவள்ளி மா | 9600302203 |

| | | | |
|---|---|---|---|
| 23 | வார்டு 23 | திருமதி இந்துமதி முத்துலெட்சுமி | **9940799497** |
| 24 | வார்டு 24 | திரு ரமேஷ் சே | **9171771711** |
| 25 | வார்டு 25 | திருமதி செல்வி சே | **8072222601** |
| 26 | வார்டு 26 | திருமதி லெட்சுமி சு | **9952209821** |
| 27 | வார்டு 27 | திருமதி இந்திராமேரி செ | **9443286554** |
| 28 | வார்டு 28 | திரு இராமநாதன் ச | **9865688090** |
| 29 | வார்டு 29 | திருமதி காயத்திரி கா | **8870211131** |
| 30 | வார்டு 30 | திரு கார்மேகம் கு | **9443985181** |
| 31 | வார்டு 31 | திரு முகம்மது ஜஹாங்கீர் மு | **9944432040** |
| 32 | வார்டு 32 | திருமதி மெகர்பானு நா | **9952622823** |
| 33 | வார்டு 33 | திருமதி பஞ்சவர்ணம் கு | **9884800037** |

**<u>நகர்மன்ற தலைவர்</u>**

அறிக்கையாண்டில் நகர்மன்ற தலைவராக திரு.கு.கார்மேகம் அவர்கள் **04.03.2022** அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**<u>நகர்மன்ற துணைத்தலைவர்</u>**

அறிக்கையாண்டில் நகர்மன்ற துணைத் தலைவராக திரு.இரா.பிரவீன் தங்கம் அவர்கள் **04.03.2022** அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**<u>தேர்தல் குழுக்கள்</u>**

அறிக்கை ஆண்டில் குழுக்களாக தேர்தல் நடைபெற்றது. **28.03.2022**ல் நியமனக் குழுவிற்கு திருமதி.சபிக்காபானு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒப்பந்தக்குழுவிற்கு திரு.சே.ரமேஷ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**<u>வரி முறையிட்டுக் குழுவிற்கு நான்கு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.</u>**

1) திருமதி.மா.ராணி
2) திரு.ஜெ.ஜெயராமன்
3) திருமதி.வி.செல்வராணி
4) திரு.சன்.ராமநாதன்

**<u>நியமனக்குழு கூட்டம்</u>**

அறிக்கை ஆண்டில் ஒரு நியமனக்குழுக் கூட்டம் நடைபெற்றது. வரிமுறையீட்டுக் குழு கூட்டம் நடைபெறவில்லை.

**<u>நிர்வாகம்</u>**

பொதுப் பிரிவில் பணியாற்றும் அலுவலர்கள்

| வரிசை எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேலாளர் | 1 |
| 2 | கணக்கர் | 1 பணியிடம் காலியாக உள்ளது |
| 3 | உதவியாளர் | 1 |
| 4 | இளநிலை உதவியாளர் | 9 |
| 5 | தட்டச்சர் | 1 பணியிடம் காலியாக உள்ளது |
| 6 | பதிவறை எழுத்தர் | 1 |
| 7 | அலுவலக உதவியாளர் | 6 – 2 பணியிடம் காலியாக உள்ளது |
| 8 | இரவு காவலர் | 1 |
| 9 | புள்ளி விவர குறிப்பாளர் | 1 |
| 10 | உதவி திட்ட அமைப்பாளர் | 1 |

**<u>வசூல் பணியாளர்கள்</u>**

| வரிசை எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வருவாய் ஆய்வர் | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | 8 |
| 3 | அலுவலக உதவியாளர் | 1 |

**1.** ஆணையாளர் அவர்களின் சம்பளம், ஓய்வூதியம் ஆகியவற்றிற்கு அரசிற்கு செலுத்த வேண்டிய தொகை உட்பட பொது அலுவலர்கள் மற்றும் வரி வசூல் பணியாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கு மொத்தம் ரூ. 782.00 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**2.** நமூனாக்கள் அச்சிடவும், புத்தகங்கள், படிவங்கள் வாங்கவும் மற்றும் நிர்வாக செலவினங்கள் அறிக்கை ஆண்டில் ரூ.36.30 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**<u>நகராட்சி வழக்கறிஞர்</u>**

திரு.சரவணபாலாஜி அவர்கள் நகர்மன்ற வழக்கறிஞராக அறிக்கை ஆண்டில் பணிபுரிந்து வந்துள்ளார்.

**நகர் மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் பெயர் மற்றும் வார்டு விபரங்கள்**

அறிக்கை ஆண்டில் ஏதும் இல்லை.

**<u>நகர் மன்ற உறுப்பினர்கள்</u>**

அறிக்கை ஆண்டில் ஏதும் இல்லை.

**<u>வழக்குகள்</u>**

| | | |
|---|---|---|
| 1 | அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் நிலுவையாக உள்ள வழக்குகள் எண்ணிக்கை | 17 |
| 2 | நடப்பு ஆண்டில் தொடரப்பட்ட வழக்குகள் | – |
| 3 | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 17 |
| 4 | அறிக்கை ஆண்டில் முடிவு பெற்ற வழக்குகள் | 11 |
| 5 | அறிக்கை ஆண்டில் முடிவு பெறாமல் உள்ள வழக்குகள் | 6 |

**<u>அறிக்கை ஆண்டில் பொறியியல் பிரிவில் பணியாற்றும் நபர்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1 | இரண்டாம் நிலை பொறியர் | 1 |
| 2 | உதவி பொறியாளர் | 1 |
| 3 | குடிநீர் பிரிவு பராமரிப்பு இரண்டாம் நிலை மின் பணியாளர் | 1 –1 காலியிடம் |
| 4 | குடிநீர் பிரிவு பராமரிப்பு முதல் நிலை மின் பணியாளர் | 1 |
| 5 | வேலை ஆய்வாளர் | 1 |
| 6 | வயர்மேன் | 2 – 1 காலியிடம் |
| 7 | ஹெல்பர் | 3 |
| 8 | குழாய் ஆய்வாளர் | 1 |
| 9 | பைப் லைன் பொருத்துநர் | 1 |
| 10 | ஓட்டுநர் | 3 |
| 11 | ஊரணி காவலர் | 7 |
| 12 | மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி காவலர் | 2 |
| 13 | பீலி திறப்பாளர் | 3–1 காலியிடம் |
| 14 | பூங்கா காவலர் | 1 |
| 15 | குழாய் ஆய்வர் உதவியாளர் | 1 காலியிடம் |

பொறியியல் பிரிவு ஊதியம் இதர செலவினங்கள் மற்றும் போக்குவரத்து வசதி போன்ற வகைகளுக்கு பொறியர் என்ற தலைப்பின் கீழ் அறிக்கை ஆண்டில் மொத்தம் ஊதியம் ரூ.328.00/– இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**சாலை பராமரிப்பு**

அறிக்கை ஆண்டில் நகராட்சியில் பராமரிக்கப்படும் சாலைகள் விபரம்

| வ. எண் | சாலை விபரம் | கிலோ மீட்டர் |
|---|---|---|
| 1 | சிமெண்ட் கான்கிரிட் ரோடு | 17.63 கி.மீ |
| 2 | தார்தளம் ரோடு | 52.66 கி.மீ |
| 3 | பேவர் பிளாக் தளம் | 1.77 கி.மீ. |
| 4 | கிராவல் மற்றும் மண் சாலை | 0.38 கி.மீ. |
| | மொத்தம் | 72.440 கி.மீ. |

இந்நகராட்சியின் வழியாக மதுரை–இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை (NH) இராமநாதபுரம் தேவிப்பட்டினம் ரோடு (NH 210) மற்றும் மாநில நெடுஞ்சாலைகளான இராமநாதபுரம் – நயினார் கோவில் ரோடு, காந்தியடிகள் தெரு, விவேகானந்தர் தெரு, அறிஞர் அண்ணா சாலை நகராட்சியின் எல்லைக்குள் செல்கின்றது. இவற்றின் மொத்த நீளம் சுமார் 9.60 கி.மீட்டர் ஆகும். இச்சாலையின் பராமரிப்பு நெடுஞ்சாலை துறையினரால் செய்யப்பட்டு வருகின்றது.

**1)கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22**

(அ) இராமநாதபுரம் நகராட்சி மதுரை–மண்டபம் சாலையில் செம்மங்குண்டு ஊரணி எதிர்புறம் நூலகம் மற்றும் அறிவுச்சார் மையம் ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

(ஆ) இராமநாதபுரம் நகராட்சி மண்சாலைகளை பேவர்பிளாக் தளமாக மாற்றும் பணிக்கு ரூ.25.90 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

(இ) இராமநாதபுரம் நகராட்சி அய்யா ஊரணி மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ரூ.150.00 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

(ஈ) இராமநாதபுரம் நகராட்சி முகவை ஊரணி நீர்நிலையை மேம்படுத்தும் பணிக்கு ரூ.256.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றது.

**2) மூலதன மான்ய திட்டம் (CGF) 2021.22**

(அ) இராமநாதபுரம் நகராட்சியில் 10 தார்ச்சாலை பணிகள் ரூ.100.00 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

(ஆ) இராமநாதபுரம் நகராட்சியில் 48 பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணிகள் ரூ.440.00 லட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகின்றது.

(இ) இராமநாதபுரம் நகராட்சி அக்ரஹாரம் தெரு, அகில் கிடங்கு தெரு, சிவஞானபுரம் ரோடு ஆகியவைகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ரூ.190.00 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

**3) 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (15th CFC-Tied Grant) 2021.22**

இத்திட்டத்தின் கீழ் 4பணிகள் ரூ.98.00 லட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகின்றது.

**4) 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (15th CFC-Untied Grant) 2021.22**

இத்திட்டத்தின் கீழ் 2பணிகள் ரூ.46.80 லட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 1 பணி முடிவுற்று, 1 பணி நடைபெற்று வருகின்றது.

**5) 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (15th CFC-Urban Health Wellness Centre) 2021–22**

இத்திட்டத்தின் இராமநாதபுரம் நகராட்சி லேத்தம்ஸ் பங்களா சாலையில் ரூ.25.00 லட்சம் நகர்ப்புற சுகாதார மையம் (Urban Health Wellness Centre) மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகின்றது.

**6) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் (MLACDS Scheme) 2021–22**

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 5 நியாய விலை கடைகளும், ஒரு பயணியர் நிழற்குடையும் ரூ.54.50 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றது.

**கல்வி நிதி**

நடப்பாண்டில் கல்வி நிதியின் கீழ் பணிகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

**வறட்சி நிவாரணத் திட்டம் 2021–22**

நடப்பாண்டில் வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் பணிகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

<u>**பாதாள சாக்கடை திட்டம்**</u>

இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் அரசாணை நிலை (டி) எண்.408 நாள்.07.10.2005ல் நிர்வாக அனுமதியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் அரசாணை நிலை (டி) எண்.550 நாள்.07.10.2009ல் திருத்திய நிர்வாக அனுமதியும் பெற்று TNUDP-III திட்டத்தின் கீழ் ரூ.31.51 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து பணிகளும் முடிவுற்று 06.11.2013 முதல் பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தில் 5 கழிவுநீரேற்று நிலையங்களும், 2 கழிவுநீர் அகற்றும் நிலையங்களும், 2 சிறிய கழிவுநீர் அகற்றும் நிலையங்களும், சுமார் 64.35 கி.மீ. நீள கழிவுநீர் குழாய்கள் மூலமும், 2160 மனித ஆய்வு குழிகள், 7.1 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய உள்கட்டமைப்புடன் இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு வரை மொத்தம் 10,925 பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டு உள்ளது. நகரில் பாதாள சாக்கடை திட்டம் பராமரிக்கப்பட்டு வருவதால் பொது சுகாதாரம் பேணி காக்கப்படுகிறது.

<u>**மழைநீர் வடிகால் திட்டம்**</u>

இந்நகராட்சியில் மழைநீர் வடிகால் சுமார் 19.80 கி.மீ. நீளம் பரமாரிக்கப்படுகிறது. மேலும், 60 எண்ணம் சிறுமடைகள் (Culvert) பராமரிக்கப்படுகிறது.

<u>**காவேரி கூட்டுக்குடிநீர் திட்டம்**</u>

UIDSSMT திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதில் நகராட்சியின் மதிப்பீடு ரூ.47.70 லட்சம் ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பணிகள் முடிக்கப்பட்டு 11.06.09 முதல் பயன்பாட்டில் உள்ளது. நடப்பாண்டு வரை 6884 இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது.

**தங்கும் விடுதிகள்**

தண்ணீர் விநியோக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிற்கு அருகில் குடிநீர் வடிகால் வாரியத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வந்த விடுதி 24.06.1977–ல் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆணையாளர் குடியிருப்பு ஒன்று மட்டும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி தங்கும் விடுதிகள் ஏதும் பராமரிப்பில் இல்லை. இந்நகராட்சி எல்லைக்குள் அரசு நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையினரால் ஒரு தங்கும் விடுதி பராமரிக்கப்பட்டு வருகிறது.

**விளக்குகள்**

அறிக்கை ஆண்டில் 2007 எண்ணம் மின்சார விளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**விளக்குகள் எண்ணிக்கை மற்றும் விபரங்கள்.**

| வ.எண் | தெருவிளக்கு விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் 4 அடி டியூப் லைட்டுகள் | 1335 |
| 2 | சோடியம் விளக்குகள் | 145 |
| 3 | ஹைமாஸ் விளக்கு | 40 |
| 4 | மினிமாஸ் விளக்கு | 30 |
| 5 | 2X24 CFL | 100 |
| 6 | 4X24 CFL | 230 |
| 7 | 24 LED | 127 |
| | மொத்தம் | 2007 |

இந்த விளக்குகள் பராமரிக்கவும், மின் கட்டணமாகவும் மின் பணியாளர் சம்பளம் எல்லாம் சேர்த்து ரூ.61.50 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் 2007 எண்ணம் தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகிறது. நடப்பாண்டில் தெருவிளக்கு பராமரிப்பு தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

**வாசக சாலைகள்**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22ன் கீழ் மதுரை–மண்டபம் சாலை செம்மங்குண்டு ஊரணி எதிர்புறம் ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவுச்சார் மையம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

**பொது சுகாதாரம்**

**மருத்துவ வசதி**

அறிக்கை ஆண்டில் நகராட்சியால் நகாப்புற ஆரம்ப சுகாதார நிலையம் பராமரிக்கப்பட்டு வருகிறது மற்றும் அரசினர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை இந்நகரில் செயல்பட்டு வருகிறது. தனியாரால் 30 மருத்துவமனைகள் இந்நகரில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நகராட்சியால் வைத்திய வசதி அளிக்கக்கூடிய நகாப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மருந்தகங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**நோய் தடுப்பு**

இந்நகராட்சியால் பொது சுகாதாரப் பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிகின்றார்கள்

| | | |
|---|---|---|
| 1 | துப்புரவு அலுவலர் | 1 |
| 2 | துப்புரவு ஆய்வர்கள் | 4 |
| 3 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 6 –2 காலியிடம் |
| 4 | மகப்பேறு உதவியாளர்கள் | 3 –1 காலியிடம் |
| 5 | களப்பணி உதவியாளர் | 1 |
| 6 | ஆயாக்கள் | 3 –1 காலியிடம் |
| 7 | ஓட்டுநர்கள் | 4 |
| 8 | லாரி ஓட்டுநர் | 2 |
| 9 | துலக்குநர் | 2 –1 காலியிடம் |
| 10 | சுடுகாடு காவலர் | 2 –1 காலியிடம் |
| 11 | துப்புரவு தொழிலாளர்கள் | 78 |
| 12 | கொசு மருந்து தெளிப்பவர்கள் | 4–1 காலியிடம் |
| 14 | காலியிடம் | 78 |

துப்புரவு ஆய்வாளர்கள் பிறப்பு–இறப்பு பதிவுகள் பணிகளை பார்த்து வருகிறார்கள்.

வீடு வீடாக சென்று முதல் நிலை குப்பை சேகரிப்பதற்காக 55 சைக்கிள் ரிக்ஷா வண்டிகள் மற்றும் பேட்டரியால் இயங்கும் வாகனம் (BOV) 8 எண்ணம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலகு ரக வாகனம் (LCV) 8 எண்ணம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மக்கும் குப்பைகளை நுண்உர செயலாக்க கூடத்திற்கு (MCC) கொண்டு சென்று உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இரண்டாம் நிலை குப்பைகள் சேகரம் செய்து

உரக்கிடங்கிற்கு கொண்டு செல்வதற்கு 1 லாரி மற்றும் 1 காம்பேக்டர் லாரி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**<u>பிறப்பு இறப்பு விபரம்</u>**

அறிக்கை ஆண்டில் மொத்தம் பிறப்புகள் 13410 ஆகும். 2021 ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் பிறப்பு விகிதம் 16 % சதவீதம் ஆகும். சென்ற ஆண்டு இது 17% சதவீதமாக இருந்தது.

அறிக்கை ஆண்டில் ஒரு நகர்நல மையம் வெளிப்பட்டிணத்தில் இயங்கி வருகின்றது. இரண்டு மகப்பேறு உதவியாளர் மற்றும் மூன்று ஆயாக்கள் ஆகியோர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அவற்றில் ஒரு இல்லம் உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு நகராட்சிக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மகப்பேறு உதவியாளர்களால் அறிக்கை ஆண்டில் 38 பிரசவம் பார்க்கப்பட்டது.

அரசினாலும் தனியார்களாலும் நிர்வகிக்கப்பட்டு வரும் மகப்பேறு நிலையங்களில் தேர்ச்சி பெற்ற மருத்துவ உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**<u>குடும்ப நலம்</u>**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி மகப்பேறு மையத்தில் நிரந்தர கருத்தடை சிகிச்சை ஏதும் இல்லை.

**<u>இறப்பு விகிதம் தொற்று நோய் முதலியவை</u>**

அறிக்கை ஆண்டில் 924 இறப்புகள் பதிவு செய்யப்பட்டது. மக்கள் தொகையில் இது 1.18% சதவீதமாகும். சென்ற ஆண்டு இது முறையே 1.28% சதவீதமாக இருந்தது.

**<u>இறப்புக்கு காரணமான நோய்களின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது</u>.**

| | | |
|---|---|---|
| 1 | காலரா | இல்லை |
| 2 | வயிற்று போக்கு | – |
| 3 | காய்ச்சல் | – |
| 4 | வயிற்று கடுப்பு வயிற்றிற்கு அலைச்சல் | – |
| 5 | சுவாச கோசம் சம்பந்தமானவை | 80 |
| 6 | இருதய நோய் | 550 |
| 6 | இதர காரணங்களால் | 294 |
| | மொத்தம் | 924 |

அறிக்கை ஆண்டில் இந்நகரில் காலரா தடுப்பு ஊசி போடப்படவில்லை.

## வைசூரி

அறிக்கை ஆண்டில் வைசூரி நோயினால் யாரும் பாதிக்கப்படவில்லை. வைசூரி நோய் நாடு முழுவதும் ஒழிக்கப்பட்டு விட்டபடியால் அம்மைப்பால் வைப்பது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அறிக்கை ஆண்டில் பிளேக் நோய் ஏற்படவில்லை

## மலேரியா மற்றும் யானைக்கால் நோய் தடுப்பு

யானைக்கால் நோய் தடுப்பு வேலைகள் அறிக்கை ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்திற்கான மருந்து தெளிப்பவர்கள் 4 பேர் பணியாற்றி வருகிறார்கள். கொசு உற்பத்தியை தடுக்க பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் மருந்து துணை இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இணைந்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கொக்கிபுழு நோய்.

இந்நகரிலுள்ள அரசு தலைமை மருத்துவமனையில் கொக்கிபுழு நோய்க்கு யாரும் சிகிச்சை பெறவில்லை. கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு கழிப்பறை கட்டவும் சரியான தளம் அமைக்கப்படாத கழிப்பறை உள்ள வீடுகளுக்கு அறிக்கைகள் வழங்கப்பட்டு தளம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## துப்புரவு

இந்நகராட்சி எல்லைக்குள் சேரும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு இரண்டு டம்பர் பிளேசர் லாரிகள் மூலம் டிரைசைக்கிள்கள் மூலமும் கலவை உரத்தயாரிப்பு கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. தெருக்கள் அனைத்தும் காலையிலும் மாலையிலும் துப்புரவு செய்யப்படுகிறது.

நகரில் கீழ்கண்ட 4 இடங்களில் பிளக்ஷ் அவுட் பொதுக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டு நன் முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| 1 | தர்ப்பசயனம் ரோடு |
| 2 | தாயுமானசாமி கோவில் தெரு |
| 3 | அண்ணா நகர் தெரு |
| 4 | சேதுபதி நகர் |

**<u>கட்டண கழிப்பறை</u>**

அவை நீங்கலாக கீழ் காணும் இடங்களில் பொது மக்களின் நன்மையை உத்தேசித்து கட்டண கழிப்பறைகள் அமைக்கப்பட்டு நன்முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றது.

| | |
|---|---|
| 1 | அக்ரஹாரம் மெயின் ரோடு |
| 2 | பாண்டிகண்மாய்சாமி தெரு |
| 3 | லேத்தம்ஸ் பங்களா ரோடு |
| 4 | புது பஸ் ஸ்டாண்டு |
| 5 | அரண்மனை தெற்கு தெரு |
| 6 | அண்ணா பேருந்து நிலையம் |

**<u>திறந்த வெளியை மலம் கழித்தலை தவிர்க்கும் திட்டம் (Erdiction or open Defiction) 2021-22</u>**

இத்திட்டத்தின்கீழ் 634 எண்ணம் தனிநபர் கழிப்பிடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**<u>கலவை உர தயாரிப்பு</u>**

அ. நடப்பு ஆண்டில் கலவை உரம் தயாரிக்கப்படவில்லை. பட்டிணம்காத்தான் கிராம ஊராட்சியில் சர்வே எண் 414/4—ல் 15 ஏக்கர் நிலபரப்பில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது.

ஆ.அபாயகரமான அருவருக்கத் தக்கதுமான தொழில்கள் இந்நகராட்சிகள் சட்டம் அனுபந்தம் குறிப்பிட்டுள்ள எல்லா தொழில்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டன. உரிமையாணைக் கட்டணமாக வசூலான தொகை ரூ.361861/— ஆகும். அனுமதி பெறாமல் நடத்தப்பட்ட தொழில்களின் உரிமையாளர்களின் பெயரில் வழக்குகள் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இ.சந்தைகளும் திருவிழாக்களும் அறிவிக்கப்பட்ட வாரச்சந்தை ஒன்று நகராட்சியால் செயல்படுத்தப்பட்டன. திருவிழா எதும் இந்நகராட்சி எல்லைக்குள் நடைபெறவில்லை.

ஈ. தேசிய தடுப்பூசி திட்டம்

பல்ஸ் போலியோ திட்டத்தின் கீழ் 2021—22ஆம் ஆண்டில் நாடு தழுவிய போலியோ முகாம் நடைபெற்ற போது நகராட்சியின் சார்பில் 9523 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து .

<u>புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம்</u>

<u>அ. பள்ளி சத்துணவு திட்டம் (10+14)</u>

15.09.1984 முதல் நகராட்சி மேல்நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி ஆகியவைகளில் அரசு பொதுத் துறை 1222 நாள் 26.07.1984 அரசாணையின்படி சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சியின் பராமரிப்பில் 1 மேல் நிலைப் பள்ளியில் சத்துணவுத் திட்டம் நடைபெற்று வருகிறது. இப்பள்ளியில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 135 மாணவிகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. வாரத்தின் முதல் நாள் திங்கள் கிழமை முதல் வெள்ளி கிழமை வரை கூடுதல் சத்துணவாக முட்டையும் செவ்வாய்க் கிழமை பாசிப்பயிறு அல்லது கொண்டைக் கடலை உருளை கிழங்கும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பள்ளி சத்துணவு மையத்தில் ஒரு அமைப்பாளரும் ஒரு சமையலரும் பணியாற்றி வருகின்றனர். பள்ளி சத்துணவு மையத் திட்டத்தினை நடத்தி வர ஒவ்வொரு காலாண்டிற்கும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தொடர் முன் மானியம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு வருகிறது.

<u>ஆ. பள்ளி சத்துணவு திட்டம் (5,9)</u>

01.07.1982 முதல் நகராட்சி பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்பட்டு வந்த மாணவர்களுக்கு 24.06.1982 ஆம் தேதிய அரசு பொதுத் துறையில் 1000 எண் அரசாணைப்படி சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி பராமரிப்பில் உள்ள 1 ஆரம்பப்பள்ளியும் 2 நடுநிலைப் பள்ளியும் நாள் ஒன்றுக்கு சராசரி 200 மாணவ மாணவியர்க்கு சத்துணவும், வழங்கப்படுகிறது.

வாரத்தின் முதல் நாள் திங்கள் கிழமை புதன் கிழமை மற்றும் வியாழக்கிழமை கூடுதல் சத்துணவாக முட்டையும் பாசிப்பயிறு அல்லது கொண்டைக் கடலை கூடுதலாகவும் வெள்ளிக் கிழமை உருளை கிழங்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் 3 அமைப்பாளர்களும் 3 சமையலர்களும், 3 உதவியாளர்களும் உள்ள பணியிடங்களில் தற்போது 1 சமையலரும், 3 சமையல் உதவியாளர் பணியிடமும் காலியாக உள்ளது. பள்ளி சத்துணவு மைய திட்டத்தினை நடத்திவர ஒவ்வொரு காலாண்டிற்கும் 3 மாதங்களுக்கு ஒரு முறை தொடர் முன்மான்யம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு வருகிறது.

**தண்ணீர் ஆதாரம்**

இராமநாதபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பிரதான நீரேற்று நிலையம் காவேரி ஆற்று படுகை முத்தரசநல்லூரில் உள்ளது. இதன் தூரம் சுமார் 208கி.மீட்டடர் ஆகும். இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தினசரி 3.26 MLD விநியோகிக்கப்படுகிறது. தனிநபர் குடிநீர் அளவு 50 லிட்டர் ஆகும்.

| | |
|---|---|
| மேல்நிலை தொட்டிகளின் எண்ணிக்கை மற்றும் கொள்ளளவு | 8 (32.60 லட்சம் லிட்டர்) |
| மொத்த வீட்டு குடிநீர் இணைப்புகள் | 6884 |
| மொத்த பொதுக் குழாய்கள் | 94 |
| நடப்பாண்டில் வழங்கப்படு மொத்த குடிநீர் அளவு | 11.90 MLD |
| தனி நபர் அளவு | 50 LPCD |

மேலும், இராமநாதபுரம் நகராட்சி பழைய பொட்டிதட்டி குடிநீர் திட்டம் ரூ.11.00 கோடியில் நடைபெற்று வருகிறது. இந்நகரில் மொத்தம் 125 இந்தியா மார்க்–2 அடிப்பம்புகளும், 27 மினிபவர் பம்புகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**தீயணைப்பு பாதுகாப்பு**

10.04.73 முதல் இந்நகரில் அரசு தீயணைப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

**வெறிநாய் கடி தடுப்பு**

நகரில் அறிக்கையாண்டில் வெறி நாய் கடியினால் யாரும் இறக்க வில்லை.

**துப்புரவு தொழிலாளர்களின் சேவை நிலைமையும் வசதிகளும்**

நகரில் பல பகுதிகளில் சிறு குடியிருப்புகளில் துப்புரவு தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள். துப்புரவு தொழிலாளர்களுக்கு அரசினரால் அவ்வப்போது வழங்கப்படும் சம்பள விகிதமும் அகவிலைப்படியும், வீட்டு வாடகைப்படியும் சலவைப்படியும் ஆகிய அனைத்து படிகளும் மற்றும் போனசும் வழங்கப்பட்டு வருகிறது. முக்கிய பண்டிகைகளுக்கு அரசாணைப்படி திருவிழா முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது. தொப்பியுடன் மாஸ்க் மற்றும் கம்பூட்ஸ் சீருடை மற்றும்

காலணிகள் வழங்கப்பட்டு வருகிறது. திருமண முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது. மற்றும் வங்கி தாட்கோ மூலம் கடன் உதவிகளும் தகுந்த நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

**வருமானம் தரதக்க முயற்சிகள்**

நகராட்சியால் 6 இடங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற அபிவிருத்தி திட்டமும் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் மூலம் 5 கட்டணக் கழிப்பறைகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் அறிக்கையாண்டில் ரூ.85.77/– இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் வருவாய் தரதக்க வகையில் ஐடிஎஸ் எம்டி திட்டத்தின் கீழ் கண்ட இடங்களில் கடைகள் கட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1 | வாரச்சந்தை முன்புறம் 11 கடைகள் |
| 2 | அண்ணா பள்ளி பின்புறம் 5 கடைகள் |
| 3 | கிடாய் வெட்டி ஊரணியில் 6 கடைகள் |
| 4 | புதிய பேருந்து நிலையத்தில் 40 கடைகள் |
| 5 | புதிய பேருந்து முன்புறம் 6 கடைகள் |
| 6 | கோ–ஆப் டெக்ஸ் கடை 1 |
| 7 | சாலைதெரு வணிக வளாம் |

**அ. போக்குவரத்து**

இந்நகராட்சிக்கு சொந்தமான போக்குவரத்து வசதி ஏதும் நிர்வகிக்கப்படவில்லை அலுவலக பணிக்காக இரண்டு ஜீப் மட்டும் பராமரிக்கப்படுகிறது. அரசினராலும் தனி நபராலும் சென்னை, மதுரை, நாகர்கோவில், தேனி, பழனி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்செந்தூர், நாகூர், இராஜபாளையம், மண்டபம், இராமேஸ்வரம், கம்பம், குமுளி, சேலம், கோயம்புத்தூர் செங்கோட்டை, திருப்பதி பொன்ற முக்கிய நகரங்களுக்கு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. புதிய பேருந்து நகரங்களுக்கு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

**ஆ. பேருந்து நிர்ணயம்**

ஐ.டி.எஸ்.எம்.டி திட்டத்தின் கீழ் நவீன வசதியுடன் கூடிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு 2.5.92–ல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதில், 38 கடைகளும் இரணடு உணவு விடுதியும் ஒரு சைக்கிள் ஸ்டாண்டு, பொருள் பாதுகாப்பு அறை மற்றும் இரண்டு டிக்கட் கொடுக்கும்

அறைகளும் நவீன வசதியுடன் உள்ளது. இவ்வினங்களின் மூலம் அறிக்கை ஆண்டு வருமானம் ரூ. 40.30/– இலட்சம் ஆகும்.

**இ. ஆடு அடிக்கும் இடம்**

1.ஆடு அடிக்கும் இடத்தை நகராட்சி தொடர்ந்து அறிக்கை ஆண்டில் நிர்வகித்து வந்தது. துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு ஆடு ஒன்றிற்கு ரூ.30/– வசூல் செய்யப்பட்ட வகையில் இதன் மூலம் வருமானம் ரூ.48178/– ஆகும்.

2.அறிக்கையாண்டில் தனியார் நடத்தும் ஆடு அடிக்கும் இடம் அல்லது மாடு அடிக்கும் இடம் ஏதும் இல்லை

**தொழிற்சாலைகளும் தொழில்களும்**

நகராட்சி பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை மாவட்ட சுகாதார அலுவலராலும் தொழிற்சாலை ஆய்வராலும் ஆய்வு செய்யப்படுகிறது. இந்நகராட்சியில் சர்வே எண் 28, 299/பி1, 175,176,174/பி1,178,179,180,181,182,276பி1,162,170/பி1,169,299 ஆகிய அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலை பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. சந்தைகள்–வண்டிப்பேட்டைகள்–பேருந்து நிலையங்கள், ஆடு அடிக்கும் இடங்கள் முதலியன 2021–2022ஆம் ஆண்டிலும் அதற்கு பிந்தைய மூன்று ஆண்டுகளில் மேற்கூறப்பட்ட இனங்களுக்கு

**வருவாய் விவரம்**

| | | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 |
|---|---|---|---|---|---|
| 1 | சந்தைகள் | 2620601 | 2911779 | 3235310 | 3594675 |
| 2 | ஆடு அடிக்கும் இடம் | 187698 | 198253 | 231673 | 48178 |

**அ. சந்தைகள்**

ஒரே ஒரு வாராந்திர சந்தை நகராட்சியால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் வாரச்சந்தையை அபிவிருத்தி செய்ய மேற்படி இடத்தில் நடுத்தர மற்றும் சிறிய நகராட்சிகளில் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 13.61 இலட்சம் செலவில் 222 கடைகளும் ரூ.2.86 லட்சம் செலவில் 8 கோடவுன்களும் கட்டப்பட்டு மேற்படி 222 கடைகளும் வாரச்சந்தையும் சேர்க்கப்பட்டு ஏலம் விடப்பட் ள்ளது. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 270 வது பிரிவின் படி சாலை ஓரக் கட்டணம் (தினசரி சந்தை) வசூல் செய்யும் உரிமம் ரூ.3594675/–க்கு ஏலம் விடப்பட்டது.

**<u>மரம் நடுதலும் பூங்காக்களும்</u>**

பூங்காக்களும் இந்நகராட்சியில் நிர்வகிக்கப்பட்டு வரும் மரம் உள்ள சாலைகளின் நீளம் 3.20 கிலோ மீட்டர்களின் அறிக்கை ஆண்டில் ஆண்டு இறுதியில் உள்ள மரங்களின் எண்ணிக்கை 8000 ஆகும்.

இரண்டு பூங்காக்களும், குழந்தைகளுக்கான பூங்கா ஒன்றும் உள்ளன. பூங்காக்கள் பராமரிக்க 2021–2022 ரூ.5.00 லட்சத்திற்கு பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>நகரமைப்பு பிரிவு</u>**
**<u>1.நகரமைப்பு பிரிவு</u>**

இந்நகராட்சி பகுதியில் நகரளவு செய்யும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நகர் மன்றம் தனது 31.10.62 ஆம் நாளிட்ட 932 ஆம் எண் தீர்மானத்தில் இந்நகர் முழுவதையும் விரிவான முறையில் சர்வே செய்து அதற்கான செலவை ஏற்கவும் தீர்மானித்து அதன்படி நகரளவை செய்து முடிக்கப்பட்டு நகரளவை ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டு நகராட்சியில் பராமரிக்கப்பில் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டு நகராட்சியில் பராமரிப்பில் உள்ளது. 1971–யில் மறு நிலஅளவை செய்து 1983ல் சர்வே ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**<u>2. முழுமைத் திட்டம்</u>**

அரசாணை எண் 1863 ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 16.11.77–ல் இந்நகருக்கான முழுமைத் திட்டம் தயார் செய்து பிரசுரம் செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அரசாணை எண் 1100 வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சி துறை நாள் 21.12.84–ல் இந்நகராட்சிக்கான முழுமைத் திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. முழுமை திட்ட அங்கீகாரம் பெறப்பட்டு சுமார் 20 வருடங்கள் ஆகியுள்ளபடியால் திருத்திய முழுமை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கான வரைபடம் தயார் செய்து அனுமதி பெற நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3. விரிவு அபிவிருத்தி திட்டங்கள்**

இராமநாதபுரம் உள்ளூர் திட்ட பகுதியில் விரிவு அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டு 21 திட்டங்களாக பிரிக்கப்பட்டு ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 19(1)ன் கீழ் மாவட்ட அரசிதழில் 24.8.95–ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்கள் சார் பதிவாளர் இராமநாதபுரத்தில் பத்தி எண் 475/95 நாள் 1.12.95–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது, மேற்படி திட்டங்களில் விரிவு அபிவிருத்தி திட்டம் 1 முதல் 5 தயார் செய்து நில உரிமையாளர்கள் கூட்டம் 13.11.95–ல் நடத்தப்பட்டு ஆலோசனை மற்றும் ஆட்சேபனை பெறப்பட்டது. இராமநாதபுரம் உள்ளூர் திட்ட குழுமத்தின் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 1 முதல் 5–க்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1972 பிரிவு 25–ன் கீழ் இயக்கம் பெற வேண்டி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு 6.12.95–ல் அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் 1,3,4 ஆகியவைகளுக்கு நில உரிமையாளர்கள் கூட்டம் நடத்தப்படும் படிவம் 10 நகர் ஊரமைப்பு துணை இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

4. நகரமைப்பு அலுவலர் பணியிடம் இல்லை

**4. நகரமைப்பு ஆய்வர்கள்**

நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வர்கள் ஒருவரும், இளநிலை உதவியாளர் ஒருவர் மற்றும் சங்கிலியாளர் ஒருவரும் பணியாற்றி வருகின்றனர். அறிக்கை ஆண்டில் இவர்கள் ஊதிய செலவு ரூ.12.55/– லட்சங்கள் ஆகும்.

**5) நிலம் சம்பந்தமான இதர முயற்சிகள்**

அறிக்கை ஆண்டில் தற்காலிகமாகவும் ஆட்சேபனை இல்லாததுமான ஆக்கிரமிப்புகளுக்கு அனுமதி வழங்கவில்லை.

**6) ஆக்கிரமிப்புகள்**

| | |
|---|---|
| 1.4.2021–ல் நிலுவையில் இருக்கும் ஆக்கிரமிப்புகள் | 84 |
| 2021–2022–ல் கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகள் | 30 |
| அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் | 15 |
| நிலுவையிலுள்ள ஆக்கிரமிப்புகள் | 69 |
| இந்த ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ளது | 69 |

**வருவாய் தரத்தக்க பிற முயற்சிகள்**

ஆடு மாடுகள் அடைக்கும் பவுண்டு வருவாய் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**சொத்து வரி**

இந்நகராட்சி எல்லையிலுள்ள கட்டிடங்கள் மீது சொத்துவரி விதித்து வசூலிக்கப்பட்ட சொத்துவரி ஆண்டு வாடகை மதிப்பில் 30% சதவீதமாக 01.04.1977 முதல் விதிக்கப்பட்டு வருகிறது. சொத்து வரி ஒரு வருட கேட்பு ரூ.423.59 லட்சம் ஆக உள்ளது.

| வ.எண் | வரி விகிதாச்சாரம் | அரையாண்டிற்கு |
|---|---|---|
| 1 | பொதுக் காரியங்களுக்கு | 5.00 |
| 2 | நீரளிப்பு மற்றும் வடிகால் வரி | 7.50 |
| 3 | துப்புரவு வரி | – |
| 4 | விளக்கு வரி | – |
| 5 | கல்வி வரி | 2.50 |
| 6 | நூலக வரி | 1.25 |
| | | 16.25 |

**நிலங்களின் மீது**

காலி மனையின் மீது அதன் கிரைய மதிப்பில் அரையாண்டிற்கு 3/4 % சதவீதம் விதிக்கப்பட்டு வருகிறது.

**அதன் விபரம் வருமாறு**

| வ.எண் | வரி விகிதாச்சாரம் | அரையாண்டிற்கு |
|---|---|---|
| 1 | நீரளிப்பு மற்றும் வடிகால் வரி | 3.50 |
| 2 | பொது காரியங்களுக்கு | 10.00 |
| 3 | துப்புரவு வரி | – |
| 4 | விளக்கு வரி | – |
| 5 | கல்வி வரி | 1.35 |

கட்டிடங்கள் மீது காலி நிலங்களின் மீது வரி நீங்கலாக விதித்து வசூலிக்கப்பட்ட வரித் தொகையில் ஒவ்வொரு ரூபாய் வரித் தொகைக்கும் 0.10 பைசா நூலக வரியாக வசூல் செய்யப்பட்டு வருகின்றன.

**தொழில் வரி**

28.12.1998 ஆம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.எம்.எண்249ல் (ஆகஸ்ட் 1998)ல் தெரிவித்துள்ள விகிதத்தில் தொழில்வரி விதித்து

வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்பேரில் அரசு அலுவலக ஊழியர்களிடமிருந்து வியாபார நிறுவனங்களிலிருந்தும் அறிக்கை ஆண்டில் ரூ.53.37/– லட்சம் தொழில்வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

**<u>கேளிக்கை வரி</u>**

அறிக்கை ஆண்டில் கேளிக்கை வரியாக எதுவும் வரப்படவில்லை. சென்ற ஆண்டிலும் வருமானம் ஏதுமில்லை.

**<u>பொது மக்களின் மீதான சராசரி வரி விகிதம்</u>**

அறிக்கையாண்டில் வண்டிகள், மிருகங்கள் மீது விதிக்கப்பட்ட வரி தவிர மற்ற அனைத்து இனங்களில் மீதும் விதிக்கப்பட்ட வரிகள் மக்கள் தொகையில் நபர் ஒன்றுக்கு 130 ஆகும். சொத்து வரி விதிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 623 ஆகும்.

2021–2022 ஆம் ஆண்டு அனைத்து வரியினங்களுக்கும் சேர்த்து மொத்த கேட்பு ரூ.1763.21 லட்சம்

**<u>போதுமான நிதி நிலை</u>**

அறிக்கை ஆண்டில் மொத்த வரவு ரூ.2215.98 லட்சம் செலவு ரூ.2362.54 லட்சம் ஆகும்.

**<u>கடன்கள்</u>**

அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.9727.39 லட்சங்கள் நிலுவையாக உள்ளது.

**<u>தணிக்கை</u>**

நகராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டின் கணக்குகள் இராமநாதபுரம் உதவி தலநிதி கணக்குகள் இயக்குநர் அவர்களால் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றது. சென்ற தணிக்கை ஆண்டில் இராமநாதபுரம் நகராட்சி நிதி, நிர்வாகம், கணக்குகள், பராமரித்தல் மற்றும் இதர செயல்பாடுகள் ஆவணங்களின் அடிப்படையில் ஆய்வு செய்ததில் இந்நிறுவனத்தில் செயல்பாடுகளின் தரம் ‘டி’ நிலையில் அமைந்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

அறிக்கை ஆண்டின் துவக்கத்தில் 732 தணிக்கை ஆட்சேபனை நிலுவையாக இருந்தது. அறிக்கை ஆண்டில் தணிக்கைத் தடைகள் பெறப்பட்டுள்ளது. எனவே அறிக்கை ஆண்டின் இறுதியில் 542 தணிக்கை தடைகள் நிலுவையாக உள்ளது. அவற்றையும் நிவர்த்தி செய்யப் போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>சொத்து மதிப்பு மற்றும் பொறுப்புகள்</u>**

நகராட்சியின் கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகிய சொத்துக்களின் மதிப்பு ரூ.2657.80/– லட்சங்கள் ஆகும்.

**<u>பொது குறிப்பு</u>**

இராமநாதபுரம் நகராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டு வரி வசூல் (அரசு கட்டிடங்கள், வழக்கில் சூழப்பட்டவை தவிர்த்து வரியினத்தில் 58.89% வசூல் செய்யப்பட்டுள்ளது.

நகர் மன்றம் தனது அனுபவத்தாலும் மற்றைய வசதிகளாலும் கடினமான நிதி நெருக்கடியிலும் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளான ரோடு வசதி, விளக்கு வசதி, சீரான குடிநீர் விநியோகம் மற்றும் பொது சுகாதாரம் போன்ற அத்தியாவசியமான பணிகளை நடப்பு ஆண்டிலும் நன்முறையில் பராமரித்து வந்துள்ளது.

நகராட்சி நல்லமுறையில் நடைபெற தேவையான நேரங்களில் அடிப்படை ஆலோசனை கூறி ஒத்துழைப்பு கொடுத்தமைக்காகவும், அவ்வப்போது தேவையான ஆக்கமும் ஊக்கமும் தந்து எங்களது முயற்சிக்கு உறு துணையாக இருந்ததற்கு, நகர் மன்றத்திற்கும், மதுரை, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கும், மண்டல செயற்பொறியாளர், பொறியாளர், இளநிலை பொறியாளர், சுகாதார அலுவலர், மேலாளர், கணக்கர் மற்றும் அனைத்து உள் வெளி பணியாளர்களுக்கும் என்னோடு ஒத்துழைத்து நகராட்சி நிர்வாகத்தை செவ்வனே நடத்திட ஒத்துழைப்பு நல்கியதற்கு எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்(கூ.பொ)**
**இராமநாதபுரம் நகராட்சி**